# சிறியேன் சிறு விண்ணப்பம் - வரிசைகள்

**காவாய் நீ!**

மூவாசைப் பாழ்கடலில் முப்போதும் மூழ்கின்றேன்
தேவாநான் எந்தவிதம் தேறுவனோ? – காவய் நீ!
தந்தைதாய் நீயின்றி தாங்கிடதான் வேறிங்கே
சொந்தயிடம் ஏதெனுக்குச் சொல்?

**உன்னடி சரணம்**

கற்றுபலக் கலைக ளெல்லாம்
காசிபணம் தேடவன்றி
சுற்றியலை மனக்குரங்கை
சுருட்டிவைக்க ஏலவில்லை!
பற்றற்ற யோகி ஆகிப்
பாதமலர் பற்றிடவே
உற்றஓர் உபாயம் நீ
உன்னடி சரணம் ஐயா!